# ஞானோதயம்.

—(x)—

பிரம்மஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரிகம் மு[illegible]
உயர்நல விஷயங்களைப் பரவச்செய்யும் ஓர்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தாகுதி 17 } 1926-ஷ ஜூலை-மீ 11உ { பகுதி 1.

உ

நித்தியமாய் நிர்மலமாய் நிஷ்களமாய்
நிராமயமாய் நிறைவாய் நீங்காச்
சுத்தமுமாய்த் தூரமுமாய்ச் சமீபமுமாய்த்
துரியநிறை சுடரா யெல்லாம்
வைத்திருந்த தாரகமா யானந்த மயமாகி
மனவாக்கெட்டாச்
சித்துருவாய் நின்றவொன்றைச்
சுகாரம்பப் பெருவெளியைச் சிந்தைசெய்வாம்.

---

## பாரதஸமாஜ நித்தியபூஜை.

சென்ற சஞ்சிகையில் ஸ்ரீ பாரதஸமாஜ தேவாலயத்தில்
[illegible] கொண்டிருக்கும் நித்திய பூ[illegible] முறையைக் குறித்
[illegible]ஸ்லோகங்களைக் குறி[illegible]ாம். [illegible]

அப்பால் அத்வர்யு மணி நாதம் செய்து, பின்னர் இரண்டு மந்திரங்களால் விக்கினகாரியாயுள்ள பூதங்களையும், பிசாசாதிகளையும், பரமேசுவரனது ஆக்ஞானுஸாரமாய் விலகிப்போகும்படி சங்கற்பிப்பார். எல்லோரும் அவ்விதமே சங்கற்பிப்பார்கள். இப்பிரகரணத்தால் ஸ்தலசுத்தியும் பிசாசாதி பூத உச்சாடனமும் செய்யப்படும். அப்பாலுள்ள காரியம், "திக்குபந்தம்". "ஓம் ஹூம் ஹுவம் ஸுவம்" எனும் மந்திரத்தால், பூர் புவர் ஸுவர் லோகங்களில் ஆலயத்தைச் சுற்றிலும் ஒரு அதிர்சயமான ப்ராகாரத்தை மானஸீகமாய் நிர்மாணஞ்செய்வார். அதன் மூலத்தில், நிகிருஷ்டமாயுள்ள க்ஷுத்ர பாவங்களாகட்டும், க்ஷுத்ர தேவதைகளாகட்டும் உள்ளே பிரவேசியாமல் இருக்கும்; கேவலம் உத்கிருஷ்டமாயுள்ள பாவங்கள், சக்திகள், தேவதானுக்கிரஹம் இவை மாத்திரம் பிரவேசிக்கக் கூடியவண்ணம் சங்கற்பிக்கப்படும். அதற்கப்பால், அத்வர்யு அபிமந்திரிதமாயுள்ள தூப திரவியங்களை அக்கினியில்போட்டு, புனிதமான சூக்தங்கள் சிலவற்றை உச்சரித்துக்கொண்டும், தேவதைகளை தியானித்துக்கொண்டும், இந்திர, ஸோம, வருண, யம, ஜாதவேதர்களை ஸ்மரித்து, அத்வர்யுவுக்கும், பூஜிக்கும் ஏனையோர்களுக்கும் வரிசையாய் நல்ல நீதியையும், நல்ல ஸ்திதியையும், உசித பிரவர்த்தனத்தையும், தம்மிடமுள்ள நீசஸ்வபாவத்தை நிர்மூலம் செய்யக்கூடிய சக்தியையும், உத்ஸாஹ சக்தியையும் அனுக்கிரஹிக்கும்படியாய்ப் பிரார்த்திப்பார். அப்பால் எல்லோரும், காயத்திரியை, ஸப்த வியாஹிருதிகளுடனும், சிரோ மந்திரத்துடனும், நல்ல ஸ்வரத்தோடு ஒரே மொழியாய் உச்சரிப்பார்கள்.

இந்த தூபம் வியாபித்துக்கொண்டிருக்கும் பொழுது இந்திராதிதேவதா தியானம் செய்யப்பட்டு, காயத்திரீ உச்சாரணம் நிகழ்ந்துகொண்டிருக்கும்பொழுது, அதிர்சயமாக ஒரு அத்புத பலன் உண்டாகின்றது. மானஸீகமாய் ஸ்மரிக்கப்பட்ட ப்ராகாரத்தினின்று சூக்ஷுமப்பிரகிருதிமயமாயுள்ள ஸ்தம்பங்கள் சூக்ஷும திருஷ்டிக்குப் புலப்படும். ஸ்தூல ஆலயத்தை ஆவரித்துக்கொண்டு ஒரு சூக்ஷும ஆலயம் நிர்மாணமாகின்றது. இதுவரைக்கும் இப்பிரகாரத்திலும், ஸ்தம்பங்களிலும், பிருதிவீ ஆகாசமும், புவர்லோக பிரகிருதியும் மாத்திரம் விசேஷமாய்ச் சேர்ந்திருக்குமாம். இதுவுமன்றி காயத்திரீ உச்சாரண காலத்தில் மற்றொரு

பிரத்யேகபலன் காணப்பட்டது. காயத்திரியை உச்சாரணம் செய்கையில் சூர்ய பிம்பத்தினின்று ஒரு அத்புதமாயுள்ள ஜோதிக் கிரணம் கானம் செய்பவரின் ஹிருதயத்திற்கு நன்றாய்ப்பிரவேசித்து, அவரது சரீரத்தையும், அதைச்சுற்றிலும் கவர்ந்துள்ள தேஜஸும் நிறைந்து, அதினின்று சக்கரத்தின் மத்திய கேந்தரத்தினின்று ஆரங்கள் வெளிப்படுவதுபோல் அவர்கள் எதிரில் ஏழு ரேகைகள் வெளிப்படும்.

இவ்விதம் வெளிப்படும் ரேகைகள் அவர்களுக்கு எதிரில் வரும்—அல்லது அங்குள்ள மனிதர்களின் ஹிருதயத்தில் பிரவேசித்து, அவர்களது சரீரத்தை அதிலும் முக்கியமாய் ஹிருதயம், மூளை அல்லது வேறு ஏதேனும் ஒரு சக்கரத்தை பிரகாசிக்கச் செய்யுமாம். "நமாயத்ராஃ வாரம்ஸம்த்ரும்" அதாவது காயத்திரியைவிட விசேஷ மந்திரம் வேறொன்றுமில்லை யெனப் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்களே ஒழிய, அந்த மந்திரோச்சாரணத்தால் பலன் இவ்வளவு அத்புதமாக விருக்குமென்பதாக இதுவரைக்கும் நமக்குத் தெரியவில்லை. சூரிய மண்டலத்திலுள் வசிக்கும் மஹா புருஷனினின்று, இவ்விதம் தேஜஸ், மந்திரத்தை உச்சரிப்பவர்களுக்கே யல்லாமல், அவர்களைச் சந்திக்கும் எல்லோருக்கும் வியாபித்து அவர்களுடைய ஹிருதயங்களையும் மிகவும் பிரகாசிக்கச் செய்யும், இவ்வித மஹிமையை அறிந்து, ஞானத்தோடு உச்சரிக்கின், அப்பலன் வெகுமடங்கதிகரிக்கு மென்பது ஸ்பஷ்டம். இதுவரைக்கும் நடத்தப்பட்ட பாகம் பூஜாங்கமெனச் சொல்லத்தகும். இனிமேலுள்ள பாகம் பூஜையின் முக்கிய பாகம்.

இது நான்கு பாகங்களாக இருக்கின்றன:—

1. அக்கினிதேவதா ஆராதனை.
2. வருணதேவதா ஆராதனை.
3. தேஜோதேவதா ஆராதனை.
4. பரமேசுவர ஆராதனை.

அதின்முடிவு பரமேசுவரனுடைய ஆராதனையே யொழிய வேறில்லை. ஆயினும், பரமேசுவரனது ஆக்ஞையின்படி நடப்பவர்களும், அதோலோகங்களில் அதாவது கீழ் உலகங்களில் அப்பரமேசுவரனுடைய பிரதிநிதிகளாயுள்ள தேவதைகளின் ஆராதனையின் துவாரா பரமேசுவரனை ஆராதிப்பார்கள்.



## 1. அக்கினிதேவதா ஆராதனை.

இதில் முதலில் ஸ்தூலப் பிரபஞ்சத்தில் ஈசுவரப் பிரதிநிதியாக வைசுவானரனை, அதாவது அக்கினிதேவனை ஆஹ்வானம் செய்வார்கள். "ஓம் பூஃ புவஃ ஸுவஃ" எனும் மந்திரத்தோடு அக்கினியைப் பிரதிஷ்டை செய்து, அக்னிஸ்வரூபத்தை நிரூபிக்கும் வேதமந்திரங்களால் ஆவாஹனம்செய்து, அக்னி ஸூர்ய பிரஜாபதிகளுக்கு ஹோமம் செய்து, வேறு சில மந்திரங்களால் மீளவும் அக்கினியை தியானம் செய்வார்கள். முடிவில் அத்வர்யு ஹோமாக்கினியை பூஜித்துக்கொண்டிருப்பவர்களிடம் கொண்டு போய்க் காட்டவே ஒவ்வொருவரும் தன் நான்காம் விரலால் (மோதிர விரலால்) அதிலுள்ள பஸ்மத்தைத் தொட்டு, எல்லோரும் எடுத்துக்கொண்டபின்னர், அத்வர்யு தானும் கிரஹித்து, எல்லோரும் ஏகவாக்கியமாய் ஸப்த வியாஹிருதிகளை உச்சரித்துக்கொண்டு, அவ் விரலால், சிரஸையும், புருவமத்தியையும், கண்டஸ்தானத்தையும், நாபிஸ்தானத்தையும், ஹிருதயப் பிரதேசத்தையும், இடம் வலம் புஜங்களையும் ஸ்பர்சித்து, திரும்பவும் சிரமேல் கையை வைத்து காயத்திரீ சிரோமந்திரத்தோடுகூட பூர்த்திசெய்வார்கள். இக்காரணத்தால் ஸ்தூலசூக்ஷ்ம சரீரங்களில், தேவதா தேஜஸ் பிரவஹித்து, நல்லதேஜஸ் உண்டாகும் வண்ணம் சங்கற்பிப்பார்கள். உலக கைங்கரியபாவங்களுக்கு ஸ்தானமாயுள்ள ஹிருதயசக்கரம், அவ்வித ஸேவையைச் சரியான மார்க்கத்தில் கொண்டு செலுத்துவதற்கு வேண்டிய புத்தியூக சக்திக்கு ஸ்தானமாயுள்ள மூளையும், அவ்விதபாவங்களைக் காரியரூபமாகக்கொண்டு நடத்தும் காயசக்தியைக் குறிக்கும் கை புஜங்கள் முக்கியமானவைகள்.

சூக்ஷ்மசரீரத்தில் சக்கரங்களுக்குக்கூட நல்ல தேஜஸ் உண்டாகும்.

அக்கினிதேவதையை ஆவாஹனம் செய்து, ஆஹுதிகள் கொடுத்துத் தியானிக்கும் காலத்தில், பூஜிப்பவர்களிடமிருந்து விசேஷ பக்தி வெளிப்படுவதும், முன்னர் குறிப்பிட்ட "சூக்ஷ்ம ஆலய" த்தில் தேஜஸ் தத்வ ஸம்மந்தமான சுவர்க்கலோகப் பிரகிருதியும் சேர்ந்து பூர்வம் காணப்பட்ட சூக்ஷ்ம ஸ்தம்பங்களின் பேரில் கவர்ச்சி ஏற்படும் விதம் சூக்ஷ்மதிருஷ்டிக்கு கோசரமாயிற்று. இப்போது ஸ்தூல ஆலயத்தை எல்லா திக்குகளிலும்

ஆவரித்து சூட்சும ஆலயம் நிருமிக்கப்பட்டது. ஆனால் ஸ்தம்பங்களுக்கு மேல்கவர்ச்சி (மூடல்) மாத்திரம் ஏற்பட்டதேயொழிய கோபுரம் இன்னும் காணப்படவில்லை.

## 2. வருணதேவதா ஆராதனை.

வருணதேவதை ஜலத்திற்கு அதிதேவதை. ஆகையால் புவர்லோகத்தில் (அப்பு தத்வம்) பரமேசுவரனுடைய ப்ரதிநிதியாக, வருணன் ஆராதிக்கப்படுகிறான். முதலில் ஒரு மந்திரத்தால் ஜலத்தை கலசத்தில் வார்த்து, வருணதேவதை சம்மந்தமாயுள்ள மற்றும் சில மந்திரங்களாலே அந்த ஜலத்தை அபிமந்திரித்து, அப்பால் "ஜ்யோதிரஹம், விரஜா விபாப்மா, பூயாஸம் ஸ்வாஹா" என்னும் வாக்கியத்தோடு முடியும் எட்டு மந்திரங்களாலே எல்லோரும், தங்கள் தங்கள் உபாதிகளில், பிரதிவ்யாதி பஞ்ச பூதங்களும், சப்த ஸ்பர்சாதி சூக்ஷ்மபூதங்களாயுள்ள தன்மாத்திரைகளும், அன்னமயாதி கோசபஞ்சகமும், விசுவ, தைஜஸ, ப்ராக்ஞாத்மாக்களாயுள்ள, ஆத்மா, அந்தராத்மா, பரமாத்மாக்களும், பூர்ணமாக மாலின்யம் நீங்கும் வண்ணம் தியானிப்பார்கள். அப்பொழுது அத்வர்யு அபிமந்திரித்த ஜலத்தை எல்லோர் மேலும் ப்ரோக்ஷிப்பார்.

அப்பு தேவதா ஆஹ்வானகாலத்தில் சூக்ஷ்ம தேவாலய நிர்மாணத்தில் புவர்லோக பிரகிருதி விசேஷமாக சேர்ந்தது. ஆலயத்தின் சூக்ஷ்மரூபம் கிரம கிரமமாய் ஸ்பஷ்டமாகி பூர்த்தியாவதுமன்றி விசேஷ சக்தியும் ஆலயத்தில் நிரம்பிற்று.

## 3. தேஜோ தேவதா ஆராதனை.

சூரியனே இங்கு உபாஸிக்கப்படுகிறவர். அத்வர்யு அகண்டஜோதியினின்று மற்றொரு சின்ன ஜோதியை கொளுத்தி கையில் பிடித்து சூரியதேவதா சம்பந்தமாயுள்ள மந்திரங்களால் தியானிப்பார். அப்பால் எல்லோரும் கலந்து,

"ஸூர்யம்ஸ்வஜ்யோதிர்ஜ்யோதிரஹமஸ்மி
ஜ்யோதிர்ஜ்யோதிர்ப்ரஹ்மாஹமஸ்மி
யோஹமஸ்மி ப்ரஹ்மாஹமஸ்மி



அஹமஸ்மி ப்ரஹ்மாஹமஸ்மி
அஹமேவாஹம் மாம் ஜுஹோமி ஸ்வாஹா"

என்னும் மந்திரத்தை உச்சரிப்பார்கள். முடிவில் எல்லோரும் கலந்து காயத்திரி மந்திரத்தை சப்தவியாஹிருதி சிரோமந்திரங்களுடன் சேர்த்து உச்சரித்துக்கொண்டு, அத்வர்யு சின்ன ஜோதியை அகண்ட ஜோதியுடன் சேர்ப்பார்.

இந்தப் பிரகரணத்தின் பாவம் மிகவும் முக்கியமாய் அறிந்துக்கொள்ளவேண்டிய விஷயம். அகண்டஜோதி பரமாத்மாவின் சின்னமென ஏற்கனவே விவரித்தோமல்லவா? அதனின்று கொளுத்திய சின்னஜோதி பரமாத்மாவினின்று வெளிப்பட்ட ஜீவாத்மாவைக்குறிக்கின்றது. உபாஸனைகளால் ஜீவாத்மா பரமாத்மாவின் ஸ்திதியை அடைதலை சூசிப்பித்தலும், முடிவில் "அஹமேவாஹம் மாம் ஜுஹோமி ஸ்வாஹா" என்னும் வாக்கிய அர்த்தத்தை தெளிவுபடுத்துவதே, சின்ன ஜோதியை பெரிய ஜோதியுடன் சேர்த்தலாகும்.

அவ்வித ஏகபாவனையாலேயே ஜீவன் பரமேசுரனுடைய சன்னதியை அடைவான்.

## பரமேசுவர ஆராதனை.

அப்பால் தியானம் ஆரம்பிக்கப்படும். அத்வர்யு கர்ப்பூரத்தை கொளுத்தவே, எல்லோரும், ஸர்வாத்ம சொரூபனும், ஸர்வாந்திரியாமியும், ஸர்வாதீதனுமான பரமேசுவரனை தியானிப்பார்கள். "ஸஹஸ்ரசீர்ஷா புருஷ:...... த்ரிபாதஸ்யாம்ருதம் திவி" என்னும் வாக்கியங்களால் தியானித்து, "தத்விஷ்ணோ: பரமம் பதம்" இத்தியாதி வாக்கியங்களால் அவ்வித பரமபதத்தை ஞானிகளும், பக்தர்களும் பார்க்கக் கடவார்கள் என்பதாகத் தெரிந்துகொண்டு முடிவில் "நமஸ்தேஸ்து பகவன் விச்வேச்வராய மஹாதேவாய ........ ஸ்ரீமந்மஹாதேவாய நம:" என முடித்து கர்ப்பூர ஹாரதி பிரஸாதத்தை ஸ்வீகரிப்பார்கள். இது தியான ப்ரகரணத்தில் பிரதம பாகம்.

இந்த தியானகாலத்தில் அதிக தீவிரமான பக்தி ஸ்பஷ்டமாக வெளிப்படும். அதனுடன் சூக்ஷ்ம ஆலயத்திற்கு, மேல்

பாகத்தில் ஒரு கோபுரம் ஏற்படும். ஸ்தூல ஆலயத்திற்கு கோபுர ஸ்தானம் மிகவும் சிறிதான கட்டடமும், அதன்பேரில் ஒரு தங்க சிகரமாத்திரம் இருக்கின்றன. இப்பொழுது சூக்ஷ்ம லோகத்தில் அமைக்கப்பட்ட கோபுரம் மிகவும் உன்னதமானது. சூக்ஷ்ம ஆலய மெல்லாமும், கோபுரமும் சித்திரமான அலங்காரங்களும், அதி அத்புதமான வர்ணங்களும்—அதில் எல்லாவற்றையும் விட விசேஷமாக நீலவர்ணமும்—மிகவும் ஜ்வலித்து பிரகாசிக்கும். அதில் நீலவர்ணம் சாமான்ய பக்தியால் உண்டாகக்கூடிய நீலவர்ணம் அன்றும். விசேஷ தீவிர வைராக்கியத்தோடு கூடின பக்தியை சூசிப்பிக்கும் "வித்யுத் ஜ்யோதி" நீலவர்ணம்.

இந்த ஆலயத்தின் சித்திரப்படங்களை நாங்கள் அச்சிடக் கூடாமைபற்றி மிகவும் விசனிக்கிறோம்.

உடனே அத்வர்யு புஷ்பங்களை எல்லோருக்கும் பாகித்துக் கொடுத்தபின்னர் எல்லோரும் கலந்து

"ஸஹஸ்ரஶீர்ஷம் தேவம்........ அநந்தமவ்யயம் கவிம் ஸமுத்ரேந்தம் விஶ்வஶம்புவம்" எனும் வாக்கியங்களாலும், ஸ ப்ரஹ்ம ஸ ஶிவ ஸ ஹரி ஸ ஸேந்த்ர ஸ ஸோக்ஷர: பரம: ஸ்வராட் .....................ஆபோ ஜ்யோதீ ரஸோம்ருதம் ப்ரஹ்ம பூர்புவஸ்ஸுவரோம், ருதம் ஸத்யம் பரம் ப்ரஹ்ம புருஷம் க்ருஷ்ணபிங்களம்। ஊர்த்வரேதம் விரூபாக்ஷம் விஶ்வரூபாய வை நம:" எனும் மந்திரங்களோடும் தியானிப்பார்கள். அதனுடன் எல்லோரும் கைகூப்பி புஷ்பத்தை ஸமர்ப்பிப்பார்கள்.

முடிவில் நைவேத்தியத்தை அர்ப்பித்து, உடனே ப்ரஸாத தீர்த்தத்தை அத்வர்யு எல்லோருக்கும் பாஹித்து அளிப்பார். ஒவ்வொருவரும் "ப்ரஹ்மணிஶுத்தா ஶுத்தாய" என்று ப்ரஸாதத்தை ஸ்வீகரிப்பார்கள். இங்கு ப்ரஸாதமெனின் ப்ரஸாதமே ஒழிய பலஹாரம் அன்று.

அத்துடன் அத்வர்யு "திக் விமோகம்" செய்வார். அதாவது "பூர்புவஸ்ஸுவரோம்" எனும் மந்திரத்தை உச்சரிப்பார். எல்லோரும் பூர்வம் ஆலயத்தைச் சுற்றி மானஸீகமாக நிர்



மாணம் செய்த சூக்ஷ்ம ப்ரகாரம் நீங்கிப்போகும்படிக்கு திடமாக சங்கற்பிப்பார்கள். பூர்வம் திக்பந்தனத்தால் விக்னஹாரிகளாயுள்ள பூதங்கள் பாவங்கள் பிரவேசியாமல், உத்தம தேவதா ப்ரஸாதமாத்திரம் பிரவேசிக்கும் வண்ணம் ஓர் கவசம் நிருமிக்கப்பட்டது. இப்பொழுது திக்கு விமோகத்தால் அந்த கவசம் கழற்றி எறியப்பட்டு, பூஜாகாலத்தில் உள்ளே பிரவேசித்த பரமேசுவர ப்ரஸாதம் அக்கம் பக்கம் தேசங்களுக்கு பிரவஹித்து சாந்தி சுபங்கள் உண்டாகக் கூடியதாகச் செய்யும்.

முடிவில் அத்வர்யு ஆசீர்வாத வாக்கியத்தை வசனிப்பார். மனோ நாட்டத்தாலும் நமஸ்காரங்களாலும் பரமாத்மாவின் ஸாந்நித்தியத்தை அடைந்து, மஹாபுருஷர்களின் சங்கத்தில் சிறிதுகாலம் இருக்கக் கடவோமாக என்று அந்த வாக்கியத்தின் தாத்பரியம். அப்பால் எல்லோரும் சாந்திவாக்கியத்தை வசனிப்பார்கள்.

ஸ்வஸ்திப்ரஜாப்ய:........ஶ்ரேநாகஸ்ஸ்தீவதெ, ஶம்வதாஷ்வெ.

ஓம் ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி: ॥

அப்பால் — ஸர்வே பவந்து ஸுகிந:, ஸர்வே ஸந்து நிராமயா:। ஸர்வே பத்ராணி பஶ்யந்து ந கஶ்சித் து:கபாக் பவேத் ॥

ஓம் தத்ஸத் ப்ரஹ்மார்ப்பணமஸ்து ॥

என்னும் ஸ்வஸ்திவாக்கியத்தால் முடிப்பார்கள்.

C. இராமய்யா.

---

# உடன்பிறப்பறம்.

## (சகோதர தருமம்.)

—:o:—

உடன் பிறப்பு அறம் என்பது நாம் அறிவினால் இயற்கையில் காணுகின்ற உண்மையாகும். இந்த உண்மையை யாரும் எளி

தில் அறிந்துகொள்ளலாமாயினும் உடன்பிறப் பறத்தை உலக வாழ்க்கையில் அநுட்டிக்கிறவர்கள் சிலரேயாவர். ஆகையால் அதனை அடிக்கடி மக்களுக்குச் சொல்லி அறிவுறுத்தல் உலக நலம் விரும்புகிற மக்கள் கடமையாகின்றது.

2. உலகினை ஆளும் கடவுள் ஒருவனே. அவனை எச்சமயம் எப்பெயரிட்டு வணங்கினும் அவனொருவனே உலகிற்கு முழு முதற்கடவுள். அவன் உயிர்களுக்கெல்லாம் தாயும் தந்தையுமாவன். ஆகையால் உயிர்களெல்லாம் உடன்பிறந்தவைகளாகும். உயிர்களுக்குள் மக்கள் பகுத்தறிவுடைய உடன் பிறந்தவர்கள் ஆவார்கள். மக்களெல்லாம் கடவுளுடைய பிள்ளைகள் ஆதலின் அவர்கள் ஒருவர்க்கொருவர் தீங்கு செய்தல் கடவுள் கருத்துக்கு மாறான செயலாகும். கடவுள் கருத்துக்கு மாறாய் மனம் வாக்குக் காயங்களினாற் செய்கிற செயல்களெல்லாம் பாவச் செயல்களே. மக்கள் ஒருவர்க்கொருவர் மனவாக்குக் காயங்களினால் தீங்கு செய்யா திருத்தலும் நன்மை செய்தலும் கடவுள் கருத்துக்கு இணங்கின புண்ணியச் செயல்களாகும். இதுவே உடன்பிறப்பு அறத்துக்கு ஆதாரமாயிருக்கிற உண்மையாகும். இந்த உண்மையை அறிந்து ஒருவர் தன்னுயிர்போலவே பிற உயிர்களையும் நினைத்து உலகத்தில் ஒழுகுதல் உடன்பிறப் பறமாகும்.

3. கடவுள் உண்மையை ஒப்புக்கொள்ளாத நாத்திகர்களும் உடன்பிறப்பு அறத்தைக் கைக்கொண்டு நடப்பது அவசியமாகும். ஏனெனில் அவர்கள் தாங்கள் அடைய விரும்புகிற இந்த உலக வாழ்வு இன்பத்தை மக்கள் ஒருவர்க்கொருவர் உடன்பிறந்தார்கள் போல இணங்கி ஒழுகினால் அல்லாமல் அடைதல் முடியாது. மக்கள் ஒருவர்க்கொருவர் சம்பந்தமில்லாமல் உலகில் தனித்து வாழ்தல் முடியாது. சேர்ந்தே வாழ்தல் வேண்டும். மக்கள் சேர்ந்து சமாதானமாய் இணங்கி வாழும்படி செய்வது உடன்பிறப்பு அறமாதலால் நாத்திகர்களும் உடன்பிறப்பு அறத்தின்படி ஒழுகல் வேண்டும்.

4. இந்தவிதமாய் உயிரைப்பற்றி உள்ள உடன்பிறப்பு அறவொழுக்கத்துக்கு உடலைப்பற்றி வரும் சாதி, சமயம், வகுப்பு, ஆண், பெண் முதலிய உலகபேதங்கள் தடையாயிருத்தல் கூடாது.



5. உடன்பிறப்பு அறம் உலகில் நின்று நிலவுமானால் சாதிக் கொடுமை, சமயக்கொடுமை, வகுப்புக் கொடுமை, கல்விச் செருக்குக் கொடுமை, செல்வச் செருக்குக் கொடுமை முதலிய கொடுமைகள் உண்டாய் மக்களுக்குத் துன்பம் விளையா. அரசியல் அதிகார வர்க்கத்தினர்கள் பண ஆசை முதலிய காரணங்களினால் நடுவு நிலையினின்று வழுவி நடவார்கள். பணமுதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் கலகம்உண்டாகாது. ஒருநாட்டு மக்களுக்கும் மற்றொரு நாட்டு மக்களுக்கும் சண்டை உண்டாகாது. உலகில் சமாதானம் நிலை பெற்றுச் சுகவாழ்வு உண்டாகும். இத்தன்மையான சுகவாழ்வு உலகிலுண்டாகும்படி செய்ய அறிவுடைமக்கள் எல்லாரும் முயலல்வேண்டும். இதுவே பலவிதக் குழப்பமுள்ள இக்காலத்தில் பெரும் புண்ணியமாகும்.

உடன்பிறப்பு அறம் உலகில் எங்ஙனும் நின்று நிலவுக!

மா. வெ. நெல்லையப்ப பிள்ளை.
(பென்ஷன் தாசில்தார்.)
சிந்துபூந்துறை.

---

# உடன் பிறப்பறம்.

(சகோதர தருமம்.)

——(::)——

## நிலைமண்டில ஆசிரியப்பா.

உடன்பிறப் பறமே யுடல்நல மாக்கும்
உடன்பிறப் பறமே யுயிர்நல மாக்கும்
உடன்பிறப் பறமே யுளமகிழ் விக்கும்
உடன்பிறப் பறமே யிம்மைநல மாக்கும்
உடன்பிறப் பறமே மறுமைநல மாக்கும்
உடன்பிறப் பறமே யுறுவிக்கும் வீட்டை
உடன்பிறப் பறமே குலமேம் படுத்தும்
உடன்பிறப் பறமுண் ணாட்டு நலமாக்கும்
உடன்பிறப் பறம்வெளி நாட்டு நலமாக்கும்

உடன்பிறப் பறமன்றி யுறுதுணை யில்லை
உடன்பிறப் பறமன்றி யுய்யுநெறி யில்லை
ஆகை யாலே யுலகத் தீரே
உடன்பிறப் பறத்தை யுறுதியாய்ப் பிடிமின்
உளத்தி னினைந்திரு தயத்தி லுணர்மின்
எவ்வெத் தொழிலைச் செயல தாயினும்
இதற்கு மாறா யொன்றையுஞ் செயன்மின்
நன்றே யிதுவே நன்றா கும்மே.

மா. வெ. நெல்லையப்ப பிள்ளை.
(பென்ஷன் தாசில்தார்.)
சிந்துபூந்துறை.

---

# பஞ்சமஹா யக்ஞம்.

——:O:——

அனேகர் ஆழ்ந்து யோசிக்காத காரணத்தால், பூர்வகாலம் நல்ல காலமாயிருந்தது, இக்காலம் மிகவும் கெடுதலாய் இருக்கின்றதெனச் சொல்வதை நாம் கேள்விப்படுகிறோம். காலமென்ன செய்யும்? ஜனங்களுடைய பிரவர்த்திக்குத்தக்கவாறு காலம் நல்லதாகவும் கெடுதலாகவும் ஆகும். ஆகையால் மானிடர்கள் ஸத்பிரவர்த்திகளில் ஈடுபடுவார்களேயாயின் நன்றாயிருந்த பூர்வகாலம் மீளவும் வந்து அமையும். இதுவே காலகதியின் உண்மையான ரஹஸியம்.

ஈசுவரனுக்கு சங்கற்பமும் நியமமும் உண்டு. நியமமென்னவெனின், ஜீவர்களுடைய விகாஸமேயாம். அதாவது அவர் சங்கற்பத்தால், அவர் தன்னை யக்ஞம் செய்துகொண்ட காரணத்தால், அவரிடமிருந்து வெளியேறிய ஜீவர்கள் விகாசமுறைமையில் முன்சென்று அவரைப்போல் பிரபலப்பட்டு மீளவும் அவரையே அடைதலாகும். சிலர், ஏகமாயிருந்த அவர் தன்னை யேன் யக்ஞம் செய்துகொண்டு பல ஜீவ ரூபங்களாக ஆனாரென வினவலாம். அதற்குச் சமாதான மென்னவெனின், அவரோ சத், சித், ஆனந்த மூர்த்தி. அதாவது சச்சிதானந்த மூர்த்தி. அவரிடம் ஆனந்தமிருப்பதால் தான் ஏகமாகவே இருக்கும் விஷயத்தில் ஆனந்தத்திற்குக் கருத்தேயில்லாது போகும். இரண்டாவதாக ஒரு வஸ்து இருந்து யக்ஞம் செய்தால் அல்லது கொடுத்தால்தான் ஆனந்தமாகும். ஆனதுபற்றியே அவர் "ஏகோஹம் பஹுஸ்யாம:" என சங்கற்பித்ததால் வெகுவாயானார்.



இதைத்தான் ஸ்ரீ கிருஷ்ணன் பகவத்கீதையில்,

ஸஹயஜ்ஞா: ப்ரஜா: ஸ்ருஷ்ட்வா
புரோவாச ப்ரஜாபதி: ।
அநேந ப்ரஸவிஷ்யத்வ
மேஷ வோ(அ)ஸ்த்விஷ்டகாமதுக் ॥

"பூர்வகாலத்தில் பிரஜாபதியானவர், யக்ஞத்தோடுகூடவே மானிடவர்க்கத்தைச் சிருஷ்டித்து, "நீங்கள் இதனால் அபிவிர்த்தியடையுங்கள், இது உங்களுக்குக் கோரியவைகளைக் கொடுக்கிறதாகட்டும்" என்று சொன்னதாகச் சொன்னார்". ஆகையால் பகவத்சங்கற்பம் நியமம் இவைகளைக் குறிப்பிட்டறிந்து அதன்படி நடந்தால் தான் நல்லகாலம் ஏற்படும், இல்லாவிடில் கஷ்டகாலந்தான். அனேகர்களுக்கு பகவானை யடையவேண்டுமென்ற ஆவல் மிக்கவாறுமிருக்கின்றது. ஆவல் மாத்திரமிருந்து அதற்குவேண்டிய முயற்சி எடுக்காவிடின் என்ன பிரயோஜனம். ஒரு வேலைக்காரன் எஜமானனுடைய குறிப்பறிந்து நடக்காவிடின் எஜமானுடைய தயவைப் பெற முடியுமா? முடியாதன்றோ! அதுபோலவேதான் பகவானையும் அடையமுடியாது. சிலர் சரியான தத்துவ ஆராய்ச்சியற்றவர்களாய் செய்யவேண்டிய ஸத்கர்மங்களில் சிரத்தைக் குறைவும் உபேக்ஷையும் ஏற்பட்டு தங்கள் வாழ்நாளைக் கெடுத்துக் கொள்கிறார்கள்.

பகவத்கீதையில் பகவான் "ஹே பார்த்தா! இம்மூவுலகங்களிலும் எனக்குச் செய்யவேண்டியது ஒன்றுமில்லை. அடையாதது அடையவேண்டியதாய் எனக்கு யாதொன்றும் கிடையாது, அப்படியிருந்தாலும் நான் கர்மத்தில் பிரவர்த்தித்தே யிருக்கிறேன்" எனச் சொல்லியிருக்க அவரை அடைய விரும்புவோர்கள் அவர் வழியை அனுசரிக்காவிடின் எவ்விதம் க்ஷேமப்படுவது? மேலும் பகவான் "யக்ஞத்தால் நீங்கள் விர்த்தியடையச் செய்யுங்கள்,

தேவதைகள் உங்களை விருத்தி யடையச்செய்யட்டும். ஒருவரை யொருவர் விர்த்தியடையச் செய்துகொண்டு நீங்கள் மேலான நன்மையை அடையுங்களென்றும், யக்ஞத்தால் விர்த்தியடைந்த தேவதைகள் நீங்கள் விரும்பும் போகங்களை உங்களுக்களிப்பார்களென்றும் எவனொருவன் அவர்களளித்ததை அவர்களுக்குத் திருப்பிக்கொடாமல், தானே அனுபவிக்கிறானோ அவன் உண்மையில் திருடனே என்றும், யக்ஞ சேஷத்தைப் புசிக்கும் ஸாதுக்கள் ஸகல பாபங்களினின்றும் விடுபடுகிறார்களென்றும், தங்களுக்காக அன்னத்தைப் பாகம் செய்யும் பக்திஹீனர்கள் பாபத்தையே உண்மையில் புசிக்கிறார்களென்றும், "அன்னத்தினின்று பூதங்களுண்டாகின்றன. மழையினின்று அன்னமுண்டாகின்றது. யக்ஞத்தினின்று மழை உண்டாகின்றது. கர்மத்தினின்று யக்ஞம் உண்டாகின்றது. கர்மம் பிர்மத்தினின்று உண்டானதென அறி. பிர்ம்மம் அக்ஷரத்தினின்று உண்டானது. ஆகையால் எங்கும் வியாபித்துள்ள பிர்ம்மம் ஸதா யக்ஞத்தில் நிலைத்திருக்கிறது" என்றும் "ஹே பார்த்தா! இங்கு எவன் பாப ஜீவியத்தையும், இந்திரியங்களில் ரமித்தலை உடையவனுமாய், இவ்விதம் சுழன்றுகொண்டிருக்கும் ஜீவசக்கரத்தை யனுசரிக்கவில்லையோ அவன் விருதாவாய் ஜீவிக்கிறான்" என்றும் பலவாறாகச் சொல்லியிருக்கிறார்.

விஷயமிவ்வாறிருக்க நாம் பகவானோடு ஒத்து ஜீவசக்கரத்தை அனுஷ்டிக்காவிடில் எவ்விதம் நன்மையை அடைவோம்! எத்தனையோ ஜீவர்கள் நமக்குத் தங்களை யக்ஞம் செய்வதாலன்றோ நாம் ஜீவித்திருக்கின்றோம். இல்லையேல் நிர்மூலமாகியிருப்போம். நமது சரீரமே பெரிய யக்ஞவாடம். இந்த யக்ஞவாடத்தில் வந்து மடியும் ஜீவர்களுக்குக் கணக்கேயில்லை.

"ஜீவோ ஜீவஸ்ய ஜீவநம்" என்றபடி ஒரு ஜீவன் மற்றொரு ஜீவனுக்கு இரையாகின்றது. அதுதான் தர்மமாக ஏற்பட்டிருக்கிறது. அதன்றி ஒரு ஜீவனும் பிழைத்திரா. மேலும் நமது ஜீவனார்த்தம் அவசியமாய் அம்மியில் சிலவற்றை அரைக்கவும் உரலில் சிலவற்றைக்குத்தவும் அக்கினியை மூட்டவும் ஜலத்தைக் கொதிக்கவைக்கவும் நடக்கவும் வேண்டியிருக்கிறது. இவ்வித பிரவர்த்திகளில் நமக்குத் தெரியாமலே எவ்வளவோ ஜீவராசிகள் அகப்பட்டு மடிகின்றன. இதுவே பஞ்சஸூனா பாபம். அவ்விதமிருக்க, நாம் மாத்திரம் இதர ஜீவர்களுக்கு யக்ஞம் செய்வதில்லையென்றால் பகவான் வாக்களித்தபடி நாம் திருடனன்றோ!



இவ்விதம் பரஸ்பரம் ஜீவர்களுக்குள் யக்ஞ இணைப்பு இருப்பதை உத்தேசித்தும் பஞ்சஸூனா பாப நிவர்த்திக்காகவும் நமது நன்மையை நாடிப் பெரியோர்கள் அநாதிகாலமாக நமக்குப் பஞ்சமஹா யக்ஞத்தைக் கொடுத்து அனுஷ்டித்துவர நியமித்தார்கள். அந்த ஐந்துவித யக்ஞத்தையும் பார்க்க பிர்ம்மாதி பிபீலிகை பரியந்தமுள்ள ஸகல ஜீவராசிகளுக்கும் யக்ஞ இணைப்பு இருப்பதாய்த் தெளிவாகிறது.

அப்பஞ்சமஹா யக்ஞமெவையெனின், ரிஷியக்ஞம் அல்லது ஞானயக்ஞம், தேவயக்ஞம் அல்லது பிரம்மயக்ஞம், பிதுர் யக்ஞம், அதிதி யக்ஞம், பூதயக்ஞம் இவைகளேயாம். இவ்வித யக்ஞத்தை பூர்வ காலங்களில் தினந்தோறும் பிராம்மணர்கள் அக்கினி ஹோத்திரம், வைசுதேவம் முதலிய கிரியைகளோடு சேர்த்து அனுஷ்டித்து வந்தமையால் அக்காலம் மிகவும் சுபிக்ஷமா யிருந்தது. காலக்கிரமத்தில் அவ்வித கிரியைகள் நழுவிப் போனமையால் இக்காலம் துர்பிக்ஷமுள்ளதாய் ஆயிற்று. ஆனால் அக்காலத்திற்கும் இக்காலத்திற்கும் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. இக்கால ரீதியில் பூர்வ காலத்தைப்போல் மேற்கண்ட கிரியைகளை அனுஷ்டிக்கக்கூடிய அவகாசம் போதுமானதாக இல்லை. அதற்காகக் கிரியைகளை விட்டுவிடலாமா? இக்கால ரீதிக்குத் தக்கவாறு சிரத்தையோடு ஸாரத்தையாவது கைநழுவ விடாமல் அனுஷ்டித்தால்தான் உலகம் நன்மையை அடையும். மேற்கண்ட விதம் விதிவத்தாக அனுஷ்டிக்கக்கூடிய அவகாசமிருக்கும் பிராம்மணர்கள் கிராமேக்ஷபமாய் அனுஷ்டிக்கட்டும். அவ்வித அவகாசமில்லாத ஏனைய பிராம்மணர்களும் மற்ற இதர வர்ணத்தார்களும் ஸாரத்தையாவது அனுஷ்டிக்கக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறார்கள். விதிவத்தாய் அனுஷ்டிக்கவேண்டியது பிராம்மணர்களுடைய கடமையெனினும் இதரவர்ணத்தார்கள் கேவலம் ஸாரத்தை அனுஷ்டிப்பதில் குற்றமொன்றுமில்லை. இதற்கு மானிட ஜென்மம் எடுத்தவர் யாரேனும் அதிகாரியாவர். (இன்னும் வரும்.)

V. இராமச்சந்திர நாயுடு.

# * திவ்யஞான ஸாரம்.

## பத்தாவது அத்தியாயம்

### பாரமார்த்திக தர்மம்.

ஈசுவராம்சமான ஜீவகளையானது, பசு பக்ஷி முதலான ரூபங்களில் நின்று பரிணாமமுண்டாகி (மாறுதல் உண்டாகி) மனுஷ்ய ஜன்மத்தை அடையும். அதுமுதல் ஜீவன் கொஞ்சம்மட்டும் ஸ்வாதந்த்ரயத்தைப்பெற்று, முன் பின் யோசிக்கவும், கார்ய காரண ஸம்பந்தத்தை அறிந்துகொண்டு, சிறிது ஸ்வதந்த்ரத்துடன் கார்யங்களை ஆரம்பம் செய்யவும் சக்தியுள்ளவனாவான். ஆகையால் தான், எல்லா ஜன்மங்களிலும், மனுஷ்ய ஜன்மம் உத்தம ஜன்மமென்று ப்ரஸித்தி யுண்டு. “உத்தமம் மாநுஷ ஜந்மம்” இந்த ஜன்மம் கிடைத்த பிறகும்கூட, ஆதியில் கேவல அஞ்ஞான ஸ்திதியிலிருந்து, மேல்சொன்ன ஸ்வாதந்தர்யத்தைக் கொஞ்சம், கொஞ்சமாக உபயோகித்துக் காரியங்களைச்செய்து, அவைகளின் பலாபலன்களை அநேக தடவைகளில் அனுபவித்து, அப்படிப்பட்ட அனேகவித அனுபவங்களால் நன்மை, தீமை, ஸுகஸாதனங்களானவை இவை, துக்கத்திற்குக் காரணங்களிவை, என்ற ஞானம் க்ரமேண அநேக ஜன்மங்களிலடைவான்.

ஆகையால் ஜன்ம ஸாபல்யத்திற்காக அதிகமான ப்ரயத்னம் செய்ய, அவகாசங்கள் மனிதனுக்குண்டு. அவகாசங்களை வ்ருதாவாக்காமல் உபயோகிப்பதும், பூர்வ அநுபவங்களாலுண்டான ஞானத்தை வ்ருதாவாக்காமல், எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்து வேலைசெய்வதும், மனுஷ்யனுக்கேற்பட்ட தர்மங்களில் முக்கியமானவைகள். ஞானம், விவேகம், இந்த இரண்டையும், எப்பொழுதும் உபயோகிக்காமல், குருட்டுத்தனமாக ப்ரவர்த்திப்பதால், மனிதன் பசுவுக்கு ஸமானனாவான். ஆஹார வ்யவஹாரங்கள், நித்ரை, சந்தான வ்ருத்தி செய்துகொள்ளுதல், பயம், மரணம், இவை மிருகங்களுக்கும், மனிதனுக்கும் ஸமான தருமங்கள்தான் அல்லவா ? விவேகமும், ஞானமும் மனுஷ்யனிடத்தில் மட்டும் காணப்படுவதால், அவைகளை ஏமாறாமல் உபயோகப்படுத்துவதே ஸகல மனிதர்களுடையும் தர்மமாகும்.

ஆதியில் ஸாமாந்ய ஜனங்கள் தங்களுடைய சிற்றறிவை விநியோகிப்பதில், கேவலம் சரீர ஸுகத்திற்காகவும், இந்திரியங்களின் த்ருப்திக்காகவும், அவைகளை ஸாதிப்பதற்கு வேண்டிய விஷயங்களை ஸம்பாதிக்கும் பொருட்டு மட்டுமே காலத்தைச் செலுத்துவார்கள். அதாவது, பொருள், காமம் இவைகளில் மனதைவைத்து அவைகளுக்காகவே, பாடுபடுவார்கள். த்ரவ்யம் ஆர்ஜிப்பதும், ஸுகங்களை அடைவதும், இவைகளே தான் புருஷார்த்தங்களென்றெண்ணுவார்கள். சிறிதுகாலம் கழிந்தபின், அநுபவத்தால் சில வ்ருத்திகள், பிறருக்கு பாதை உண்டாக்கி அதனால் தமக்கும் பாதை உண்டாவதால், அவைகள் செய்யக்கூடாத காரியங்களென்றும், மற்றும் சில வ்ருத்திகள் வேறுவிதமாக விருப்பதால், ஸுகத்திற்குக் காரணங்களென்றும், அதாவது செய்யக்கூடியவைகளென்றும் அறிந்து தர்மாதர்ம விவேக முள்ளவர்கள் ஆவார்கள். அது முதற்கொண்டு கொஞ்சம் ப்ரயத்னத்தால் தர்மத்தை மூல புருஷார்த்தமாக நினைத்து, மனிதன் தர்மத்திற்கு விரோதமின்றி த்ரவ்யார்ஜனம் செய்வதும், தர்மத்திற்கு விருத்தமில்லாமல் காம போகங்களை அனுபவிப்பதும் யுக்தமென்று தெரிந்துகொண்டு அனுஷ்டிப்பான். அதற்குப்பிறகு காலக்ரமமாக, இந்த விஷய ஸுகங்கள் அற்பகால முள்ளவையென்று அனுபவத்தினால் தெரிந்துகொண்டு, இப்படி அநித்யமானவும், மிஸ்ரமானவுமான ஸுகங்களையன்றி நித்தியமான ஸுகமுண்டாவென்று விசாரிக்க முயல்வான். அந்த நிலைமைக்கு வந்தபொழுது, ஸாமாந்ய தர்மங்களைவிட நித்யமான பலனைத்தரும் மோக்ஷ தர்மங்களைத் தெரிந்துகொண்டு, அவைகளை ஊக்கத்துடன் அனுஷ்டானம் செய்யத்தொடங்குவான்.

அப்படிப்பட்ட மோக்ஷமார்க்கத்தில் நடக்கிறவர்கள் அனுஷ்டிக்கத்தகுந்த தர்மங்கள் எவைகளோ அவைகள் யோசிக்கத்தக்கவையாகும். அந்தத் தர்மங்கள்தான் “பாரமார்த்திக தர்மங்கள்” என்றபேரால் அறியப்படுகிறவை. இவைகளையேதான் மோக்ஷ தர்

* இஃது பிரம்மஸ்ரீ C. இராமய்யா அவர்களால் இயற்றப்பட்ட தெலுங்கு நூலினின்றும் பென்ஷன் ஸப் ஜட்ஜ் பிரம்மஸ்ரீ A. இராமஸ்வாமி சாஸ்திரியார் அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. இதன் 9-வது அத்தியாயம் ஞானோதயம் 15-வது தொகுதியில் முடிந்திருக்கிறது.

மங்கமென்றும் சொல்வதுண்டு. இந்த விஷயத்தைப்பற்றி இந்த அத்தியாயத்திலும் அடுத்த அத்தியாத்திலும் விஸ்தாரமாக ஆராய்ச்சிசெய்வோம்.

ஸாமாந்யமாக, நம் தேசத்திலும், தேசாந்தரங்களிலும், எல்லா மதஸ்தர்களுக்குள்ளும், மனிதன், வீடு, வாசல், மனைவி, குழந்தைகள், லௌகிக வ்யவஹாரங்கள், எல்லாவற்றையும் விட்டு, ஸந்யாஸம் செய்துகொண்டு, காட்டிலேயோ மலைக்குகைகளிலேயோ, ஜனமில்லாத ப்ரதேசங்களில் தனியாகவோ, விசேஷமான ஸாதனங்களைப் பழக்கப்படுத்தினால் ஒழிய மோக்ஷ தர்மங்களை அநுஷ்டானம் செய்ய ஸாத்யமில்லை என்று அபிப்ராயமுண்டு. அது ஒரு மார்க்கம். அம்மார்க்கம் சில ஸந்தர்ப்பங்களில், மாத்ரம் அவசியமான மார்க்கமே தவிர அதுவன்றி இதர மார்க்கங்களுமுண்டென்பது, அநுபவ ஞானமுள்ள மஹனீயர்களுடைய அபிப்பிராயம். ஸ்ரீ பகவத்கீதா சாஸ்த்ரம் முழுவதும் வேறு மார்க்கத்தைப் போதிக்கின்றது. ஸ்ரீ கிருஷ்ணன் தன் ப்ரிய சிஷ்யனும் ஸ்நேகிதனுமான அர்ஜுனனுக்குப் போதித்தது ஸந்யாஸ மார்க்கமன்று, ஏகாந்த வாஸமுமல்ல. ஆனால் அது க்ருஹஸ்த தர்மத்தை ஞானத்துடன் நடத்தி லௌகிக, வைதிக கர்மங்களை விடாமலே மோக்ஷத்தையடையும் மார்க்கம். அந்த மார்க்கத்தை அநேக த்ருஷ்டாந்தங்களுடன் அவர் போதித்தாரல்லவா ?

"கர்மணைவ ஹி ஸம்ஸித்திமாஸ்திதா ஜநகாதய: ।
லோகஸங்க்ரஹமேவாபி ஸம்பச்யந் கர்துமர்ஹஸி" ॥

மேற்கண்ட வாக்கியங்களில் ஜநகர் முதலான அனேகர்களை த்ருஷ்டாந்தமாகக்காட்டி க்ருஹஸ்தன் மோக்ஷ தர்மங்களை அநுஷ்டானம் செய்யவேண்டிய மார்க்கங்களை ஸூசித்திருக்கிறார். ஸ்ரீ ஜநகரும் கூட அந்த மார்க்கத்தை தன்னுடைய நடத்தையில் தவிர ஸுலபா என்னும் யோகினி (ஸ்த்ரீ ஸந்யாஸி) யுடன் செய்த ஸம்பாஷணையில் ஸ்பஷ்டமாகப் போதித்துமிருக்கிறார். இந்த விஷயத்தைப்பற்றி ஸ்ரீ மஹாபாரதத்தில் சாந்திபர்வத்தில் மோக்ஷ தர்ம பர்வத்தில் ஜநக ஸுலபாஸம்வாதத்தைப் படித்து அறிந்துகொள்ளலாம். "க்ருஹஸ்த தர்மத்தை விடாமலே, மோக்ஷத்தை போதிக்க ஸாத்யமா ? அப்படி ஸாதித்தவர்கள் யாராகிலுமுண்டா ?" வென்று யுதிஷ்டிரர் பீஷ்மரைக்கேட்க அந்த அர்த்தத்தைத் தெரிவிக்கும் இதிஹாஸத்தைச் சொல்லுகிறேனென்று, ஜநக ஸுலபாஸம்வாதம்" என்கிறதை அவர் சொன்னார் அதில் ஜநகர் இப்படிச் சொல்லி இருக்கிறார்.

A. இராமஸ்வாமி சாஸ்திரிகள்.

(இன்னும் வரும்.)



# கடிதம்.

## ஞானோதயம் பத்திராதிபர் அவர்களுக்கு:—

ஐயா,

அடியிற்கண்ட விக்ஞாபனங்களை தயவுசெய்து தங்கள் உயர்ந்த பத்திரிகையில் பிரசுரிக்கவேண்டுகிறேன்.

திருமயம்
28—6—26

தங்கள் அன்புள்ள
K. S. இராமச்சந்திரய்யர்
பென்ஷன் தாசில்தார்.

---

## ஹிந்து ஆலயங்களைப் பரிபாலித்துவரும் கமிட்டிகள் தர்மகர்த்தாக்கள், மானேஜர்கள் முதலியவர்களுக்கு ஓர் விக்ஞாபனம்.

தேவாலயங்களில் தரிசனார்த்தம் செல்கிறவர்களுக்கு சுதாவாகவே பக்தியும் மனச்சமாதானமும் உற்சாகமும் உண்டாக வேண்டியதவச்யமன்றோ? ஆனால் பிரகிருதத்தில் பொதுவாக அப்படிக்கு இருப்பதாக இல்லையென்றே சொல்லவேண்டியிருக்கிறது. அதற்கு முக்கிய காரணங்கள் சில உள. அவையாவன:—

1. அபிஷேக தீர்த்தத்தை அப்போதைக்கப்போது அப்புறப்படுத்தாமல் தங்கி நிற்கச்செய்து அதனால் துர்கந்தம் உண்டாக விட்டிருப்பது.

2. தினசரி காலையிலும் மாலையிலும் சரியானபடி குப்பை செத்தைகளைக் கூட்டித்தள்ளாமல் விட்டிருப்பது. புஷ்கரணி சுத்தமாயில்லாமல் இருப்பது.

3. அர்ச்சனை, அபிஷேகம், தீர்த்தம் முதலிய பிரசாத விஷயமாக தரிசனத்துக்குச் செல்லுகிறவர்களுக்கும் கோவில் சிப்பந்திகளுக்

ளும் வாக்கு வாதங்கள் நேரிடுவதும் வம்புப் பேச்சுகளுக்கு இடங் கொடுப்பதும்.

4. தரிசனத்துக்குச் செல்லுகிறவர்கள் பிரசாதங்களைச் சாப்பிட்டுவிட்டு கோவிலுக்குள்ளேயே திரை, சுவர், தூண் முதலிய இடங்களில் கையைத் துடைப்பது; அலக்ஷியமாக அசுத்தங்களைப் போட்டு வைப்பது; ஆபாசம் செய்வது முதலியன.

1;2-வது அயிட்டங்களின் விஷயத்தில் சம்பந்தப்பட்ட சிப்பந்திகளுக்குக் கண்டிப்பாய் உத்திரவு செய்வதுடன் அதன்படி நடக்கிறார்களோ என்று கவனித்துப்பார்த்து வந்தால் மேற்கண்ட குறைகள் நிவர்த்தியாகிவிடும்.

3, 4-வது விஷயமாக அடியிற்கண்டபடி ஒரு நோட்டீஸ் தேவாலயங்களில் யாவருக்கும் தெரியும்படியாக பஹிரங்கமான இடங்களில் ஒட்டிவைத்து அதன்படி நடக்கிறதாவென்று தகுந்த உத்தியோகஸ்தர்களைக் கொண்டு ஜாக்கிரதையாகப் பார்த்து வந்தால் மேற்கண்ட குறைகள் நாளடைவில் நீங்கிவிடும். ஆகையால் அவ்விதமே செய்யக் கோருகிறேன்.

---

## விளம்பரம்.

தேவாலயங்களுக்குள் செல்கிறவர்கள் கவனிக்க வேண்டிய விஷயங்கள்:—

1. தேவாலயமானது ஈசுவரனின் இருப்பிடம்.

2. அதற்குள் செல்கிறவர்கள் கோபுரவாசலிலேயே உலகசம்பந்தமான எண்ணங்களை மனதிலிருந்து அகற்றிவிட்டு தெய்வசம்பந்தமான ஸ்தோத்திரம், நாமாவளி இவைகளை உச்சரித்துக்கொண்டு செல்லவேண்டும்.

3. அர்த்தமண்டபம் செல்லுமுன் புஷ்கரணியில் கால்களைக் கழுவி சுத்தம் செய்துகொண்டு செல்லவேண்டும்.

4. கோவிலுக்குள்ளிருக்கையில் எவ்விதமான வம்புப்பேச்சுமில்லாமல் மௌனமாகவிருப்பது நல்லது.

5. அர்ச்சனை செய்யவேண்டியிருந்தால் அதற்காகக் கொண்டுபோயிருக்கும் சாமான்களை பயபக்தியுடன் அர்ச்சகரிடம் கொடுத்து சச்சரவில்லாமல் காரியங்களை முடித்துக்கொள்ளவேண்டும்.



6. பிரசாத வினியோகம், அர்ச்சனை, தக்ஷிணை இவைகள் விஷயத்தில் மனஸ்தாபத்திற்கு இடமுண்டாகும் போலிருந்தால் அவைகளை கோவிலுக்குள் காட்டாமல் வெளியில் போய்தான் பேசிக்கொள்ளவேண்டும். எவ்வித காரணத்தை முன்னிட்டும் கோவிலுக்குள் அர்ச்சகர் முதலிய கோவில் சிப்பந்திகளாவது, தரிசனம் செய்பவர்களாவது கோபதாபங்களைக் காட்டக்கூடாது. இவைகளெல்லாம் முற்றிலும் தவிர்க்கப்படவேண்டும். ராஜ சந்நிதி, ஆச்சாரியசுவாமிகள் சந்நிதி இவ்விடங்களுக்குச் செல்கையில் எவ்வளவு பயபக்தியோடு நடக்கிறோமோ அதைவிடப் பன்மடங்கதிகமான வணக்கத்தை தெய்வ சந்நிதியில் அனுஷ்டிக்கவேண்டும். இப்படி தேவாலயங்களுக்குள் நிகழுமானால் மேற்படி ஆலயங்களுக்குச் செல்கிறவர்களுக்கு பக்தியும், சாந்தமும் உண்டாகும். கோவில்களில் யாதொருவிதமான அசுத்தமும் ஆபாசமும் செய்யக்கூடாது. உதாரணமாக பிரசாதங்களை உண்டபின் கையை தூணிலும் சுவற்றிலும் படுதா முதலிய விடங்களிலும் துடைப்பது, வாழைப்பழத்தோல்களையும் தேங்காய்மட்டைகளையும் அங்கே போடுவது எச்சல் துப்புவது, மூக்குச் சிந்துவது முதலிய காரியங்கள் செய்யவே கூடாது.

தேவாலயங்களில் குப்பை செத்தை போடுகிறவர்களும், சச்சரவு செய்கிறவர்களும் கிரிமினல் தரப்பில் பிராசிக்யூஷனுக்கு உள்ளாவார்கள்.

## கிராம்ப்பஞ்சாயத்தின் ஆளுகையை வகிக்கும் நிர்வாகசபையார்களுக்கு.

# ஓர் விக்ஞாபனம்.

கிராமப்பஞ்சாயத்துச் சட்டப்படி ஜனங்களின் சுகாதாரத்துக்கடுத்த ஏற்பாடுகளைச் செய்வதற்கு உங்களுக்கு உரிமை ஏற்பட்டிருக்கிறதல்லவா? பொதுவாக ஜனங்களின் ஆரோக்கியத்தைக் கெடுத்தும், அவர்களை அவர்களுடைய குடும்பத்தாருடன் ஒற்றுமையுடன் வாழவொட்டாமல் செய்தும் அவர்களுக்கு பொருள் நஷ்டத்தையும் உண்டாக்கிக்கொண்டுவரும் சத்துருக்களாகிய சாராயம், கள், மற்ற லாகிரி வஸ்துக்களை உங்கள் இலாகாவிலிருந்து துரத்தியும், இனிமேலும் பிரவேசிக்கவொட்டாமல் செய்வது உங்கள் கடமை என்பதை நான் சொல்லாமலே நீங்கள் உணர்வீர்கள். மேற்படி சத்துருக்களை சிநேகிதர்களாகப்பாவித்து ஆதரித்துவரும் ஜனங்களுக்கு அவைகளின் யதார்த்த குணத்தையும், அவைகளால்வரும் அனர்த்தத்தையும் தெளிவாய் எடுத்துக்கூறி அவற்றை இனிமேலாவது ஆதரிக்காமல் அவைகளை விட்டு

அகற்றி சுகமாய் வாழும்படி செய்வீர்களென்று நம்புகிறேன். மேற்படி கோரிக்கை நிறைவேறுவதற்கடுத்த விதமாய் மேற்படி சத்துருக்களை ஊருக்குள் தாராளமாய் செல்லுவதற்கு உள்ள வசதிகளை உண்டாக்கும் கடைகளைத் தங்கள் எல்லைகளைவிட்டு அப்புறப்படுத்த சீக்கிரத்தில் ஒழுங்குப்படி முயற்சிப்பீர்களாக. உங்களுடைய சபைகளில் ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்கள் அதிகமாயிருப்பதில் நீங்கள் இவ்விஷயத்தில் எடுக்கும் முயற்சி வீண்போகாதென்பது என்னுடைய துணிவான அபிப்பிராயம். அதற்கு வேண்டிய தைரியத்தையும், ஊக்கத்தையும் உங்களுக்கு அநுக்கிரகிக்கும் எல்லாம் வல்ல ஈசனைப் பிரார்த்தித்துக் கொள்கிறேன்,

## பிரம்மஞான ஸபை மெம்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

தாங்கள் வசிக்கும் ஊர்களிலும் அங்குள்ள ஆலயங்களிலும், மேற்கண்ட இரண்டு விக்ஞாபனங்களிற் கண்ட சீர்திருத்தங்கள் நடைபெறுவதற்கு தாங்கள் தூண்டு கோலாயிருந்து அவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஒத்து உழைப்பீர்களென்று பிரார்த்திக்கின்றேன.

தங்கள் அன்புள்ள சகோதிரன்,

K. S. இராமச்சந்திர அய்யர்,

பென்ஷன் தாசில்தார்.

---

### குறிப்புகள் சமாச்சாரங்கள்.

——(:o:)——

இவ்வருஷத்திய வடதமிழ் ஜில்லாக்களின் பிரம்மஞானஸபை மஹாநாடு (Federation) புதுச்சேரியில் நாளது ஜூலைமீ 24உ முதல் 27உ முடிய திவான்பஹதூர் ஸர். டி. ஸதாசிவய்யர் அவர்களின் அக்ராஸனத்தின் கீழ்நடைபெறும். பிரம்மஞான ஸபையின் இந்தியன் ஸெக்ஷன் கூட்டுப்பொதுக்காரிய தெரிசியான பிரம்மஸ்ரீ T. இராமச்சந்திரராயர் அவர்களும் திவான்பஹதூர் இராஜதர்ம ப்ரவீண ஜஸ்டீஸ் K. S. சந்திரசேகரய்யர் அவர்களும் இன்னும் மற்ற பிரமுகர்களும் விஜயம் செய்கிறார்கள். அரிய பல உபந்யாஸங்கள் நடைபெறும், விபரமானப் ரோகிராம் பின்னர் வெளியிடப்படும். பிரம்மஞானஸபை மெம்பர்களும் மற்றுமுள்ள அபிமானிகளும் அவசியம் விஜயம் செய்வார்களென்று நம்புகிறோம்.

* * * *



டாக்டர் அன்னிபெஸண்டு அம்மையார் இப்பொழுது இங்கிலாந்தில் அபாரமான வேலை செய்துவருகின்றார். இந்தியாவைப்பற்றி புதிய புஸ்தகமொன்று எழுதிவருகிறார். பிரம்மஞானம். ஸ்ரீ ஜகத்குருவின் வருகை, இந்திசுய ஆக்ஷிமசோதா முதலிய விஷயங்களைப்பற்றி அரிய பல பிரபல உபந்யாஸங்கள் புரிந்துவருகின்றார். அவர் இந்தியாவுக்குத் திரும்பிவருகிறகாலம் விபரமாய் இன்னும் தெரியவில்லையாயினும் டிஸம்பர்மீ ஸ்ரீகாசியில் நடைபெறவிருக்கும் பிரம்மஞானஸபை கன்வென்ஷன் கூட்டத்திற்கு முந்தி வந்துவிடுவார் என்று நம்புகிறோம்.

அமெரிக்க ஐக்கிய மஹாஸம் நியூயார்க் நகரில் வெளியாகும் டெய்லி எக்ஸ்பிரஸ் என்னும் பத்திரிகையில், அமெரிக்காவில் இப்பொழுது உற்பத்தியாகிவரும் புதுமாதிரியான மனிதஜாதியைப்பற்றி ஓர் ருசிகரமான வியாஸம் எழுதப்பட்டிருக்கிறதென்றும், அதில், அந்த ஜாதியாரின் குணாதிசயங்களைப்பற்றியும் சரீரமுகலக்ஷணங்களைப் பற்றியும் பல மேல்நாட்டு சாஸ்திரிகள் (Scientists) ஆராய்ச்சி செய்து வெளியிட்டிருக்கிற விபரங்களைப்பற்றியும் தியாஸபிஸ்ட் என்ற பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கிறது. 'இம்மாதிரியான ஓர் புதிய மானிட உபவர்க்கம் உற்பத்தியாகப் போகிறதென்று மாதுஸ்ரீ பிளாவட்கி அம்மையார் 1888-ம் வருஷத்திலேயே வெளியிட்டிருக்கிற விஷயம் பிரம்மஞானஸபை மெம்பர்கள் அறிவார்கள்.

---

### வேதாந்திக் குழந்தை.

பர்மாவில் டன்னகன் என்றபெயருள்ள பர்மியப் பையன் ஒருவன் இருக்கிறான். அவனுக்கு வயது ஐந்து. அவன் தந்தை மீன் பிடிப்பவன். அச் சிறுவன் மேடைகளில் நின்று வேதாந்தப் பிரசங்கம் செய்கிறான். அவன் உபந்யாசத்தைக் கேட்க ரயிலில் ஸ்பெஷல் வண்டிகள் போட்டுக்கொண்டு ஜனங்கள் திரள் திரளாகவந்து கூடுகின்றனர். அருமையான வேதாந்த விஷயங்களை எடுத்துச் சுமார் 4 மணி நேரம் மிக அழகாகப் பிரசங்கிக்கிறானும். நன்றாகப் பாடுகிறானும். அவனை புத்த பகவானின் அவதாரம் என்று பர்மியர்கள் மதிக்கின்றார்களாம்.

கிராம வாழ்க்கை.

---

## ஸஹஜஞான ஸ்தோத்திரம்.

1. நல்ல ஜீர்ணம் எனக்குநீ நல்குவாய்
நாத ஜீர்ணிக்கவும் ஏதேனும் கோடு

சொல்லுமோர் சுகதேகம் கொடுத் ததைத்
தூயதா யிருத்தும் அறிவும் கொடு
மெல்லி தான சுகமனம் தந்ததில்
மென்மை நன்மை நிஜம் எதிராயமைத்
தல்லலாம் மறம் பார்த்தும் அழுங்கிடா
ஆண்மைதா அதை ஆக்கவே சீரதாய்.

2. அல்ல லற்றதோ ரன்புள மேயருள்
ஆகுலம் பசப் பேக்கமில் லாமலே
தொல்லையே மிகக் கொள்ளவிடேல் மனம்
சோட்டை யானநா னென்னும் பொருளிலே
நல்ல தோர்விக டத்தை உணரவும்
நாடு மோர்பரி காசம் நயக்கவும்
வல்ல தாயிந்த வாழ்விற் சிலசுகம்
வாங்கி மற்றைய ருக்கு வழங்கிடே.

# A COMMON SENSE PRAYER.

## SERVICE - JANUARY 1914.

—:o:—

1. Give me a good digestion Lord
And also something to digest
Give me a healthy body Lord
And sense to keep it at its best

2. Give me a healthy mind good Lord
To keep the good and true in sight
Which seeing sin is not appalled
But finds a way to set it right

3. Give me a heart that is not bored
That does not whimper, whine, or sigh
Dont let me worry overmuch
About the funny things called 'I'

4. Give me a sense of humour Lord
Give me the power to see a Joke
To get some happiness in life
And pass it on to other folk.

☞ K. S. RAMASAWMY IYER.



தமிழ்நாடு 210805

கன்றையும் தன் சொந்தக் கையால் அன்புடன் தண்ணீர் ஊற்றியும், ஆகாரம் கொடுத்தும் வளர்த்து [illegible] வன தேவதைகள் அவளை ரக்ஷிக்கட்டும் என்று [illegible] ஆசீர்வதிக்கிறாள். அன்பை ஊற்றும் பக்ஷத்தில் பொருள்கள் மட்டும் அல்ல, காரியங்களும் சீராகவே விளங்குகின்றன. அன்பினால் செய்யும் வேலைக்கும் கடன் வேலைக்கும் வித்தியாசமுண்டல்லவா? நிற்க.

நம்நாட்டில் ஸ்திரீகளைக் காட்டிலும் நாமே பெரியோர்களென்று எண்ணுகிறோம். ஸ்திரீகளும் நம்மைக்காட்டிலும் வேறுவகையிலும் பெரியோர்கள்தான். அன்பும் பக்தியும் அவர்களிடத்தே அதிகமாய் விளங்குகின்றன. மேல் நாடுகளில் சிறு குழந்தைகளைப் படிப்பிக்க ஸ்திரீகளையே உபாத்தியாயனிகளாக அமர்த்தி யிருக்கிறார்கள். ஈசுவரன் அர்த்தநாரீசுவரரா யிருப்பது காண்க. எவ்வளவு அநாகரீகமுள்ள புருஷனும் ஸ்திரீகள் எதிரே நாகரிகமாய் நடந்துகொள்ள முயலுகிறான். அப்படியேதான் ஸ்திரீகளும் புருஷர்கள்முன் நடந்துகொள்ள முயலுகிறார்கள். இப்படி ஜனங்களுக்கு மத்தியில் பிறப்பது எதற்காக? வீடு கட்டும் கொத்தன் ஒருவன் ஒவ்வொரு கல்லையும் தன் கையினாலெடுத்து வைத்து எப்படி கட்டடத்தை உயர்த்துகிறானோ, அங்ஙனமே நாம் பழகும் பெண்டு, பிள்ளை, தாய், தகப்பனார், அண்ணன், தம்பி, பந்து, மித்திரர், ஆசிரியன் இன்னும் மற்றையோர்களையும் பார்த்துப் பார்த்து ஒவ்வொரு நற்குணமாகக் கிரஹித்து நம் ஆத்மாவைப் பரிபூர்த்தி செய்யக் கடவோம். வீடு வாசல்களும், ஆலயங்களும், சத்திரம் சாவடிகளும், தொழிற்சாலைகளும், ஆஸ்பத்திரிகளும், வித்தியாசாலைகளும், அன்புடன் மனிதர் பழகுவதற்கு ஏற்ற அவகாசங் கொடுப்பனவா யிருந்தாலல்லாமல் அவை பயனற்றவை. வித்தியாசாலைகளை நடத்தவேண்டிய முறையில், அன்பைப் பிரதான அம்சமாக அமைக்கவேண்டும். குழந்தைகளைப் பற்றி நாம் கொள்ளும் அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ளல் வேண்டும். அவர்கள் ஆத்மாக்கள் என்ற எண்ணம் வந்தாலொழிய

நாம் விபரீத திருஷ்டியுள்ளவர்களாக யிருக்கிறோம். கல்வி என்பது பிள்ளைகளைத் தடிகொண்டடித்துப் பழக்க வைப்ப தல்ல. பிள்ளைகள் தன்தன் ஆத்ம சக்திகளை தானே மலர்த்திக் கொள்வதற்குச் சிறிது ஸாதகமா யிருக்கவேண்டியதுதான் உபாத்தியாயர் செய்யவேண்டியவேலை. இந்தக் கைங்கரியத்தில் எவர்கள் தம்மைத் தாமே அர்ப்பணம் செய்துகொள்ளுகிறார்களோ, அவர்கள் மூலமாகவெல்லாம் குருநாதர்களின் பிரகாசம் வெளிவருகிறது. ஸங்கீதத்தை அப்பியசிக்கும் ஒருவன் எப்படி திடீரென்று ராகம்பாட முடியாதோ, வரிசைக்கிரமமாய் ஸ்வராவளிகளை ஒன்றொன்றாய் அப்பியசிக்காத வரை ஞானம் ஏற்படாதோ, அப்படியே குருநாதர்களுக்கும் நமக்கும் இடையிலுள்ள எண்ணிறந்த சிஷ்யர்களிடத் தெல்லாம், குருநாதருடைய பிரகாசத்தைப் பார்த்தறிந்தா லல்லாமல் நாம் குருநாதர்களை தரிசிக்க இயலோம். வருங்காலத்தில் உற்பவிக்கும் அவதார புருஷரை மஹாத்மாவெனத்தெரிந்து நல்வரவேற்க விரும்புவோர் யாவரும் பிரஹ்மஞான ஸபையில் சேருவது நலம்; ஏனெனில் இப்போது நம்கண்முன்னே மாஹாத்மயத்தோடு விளங்கும் ஓர் பெரிய ஞானஸபையை அலக்ஷியம் செய்வோமானால், அவதார புருஷரின் பாரம்யத்தை மறந்தவராவோம். இவ்வுலகத்து இயங்கும் எந்த மஹிமையும் அவரின்றி இயங்காது. நாம் இவ்வுலகத்திற் சிற்சில பரஸ்பரம் ஒருவருடைய குணங்களை மற்றொருவர் கண்டு மகிழ்ந்து அவைகளை நம்முடைய சீலத்திலும் அமையப் பெறவேண்டுமென்ற எண்ணத்துடன் பழகுவதற்கேற்ற ஸத்ஸங்கங்கள் ஸ்திரீ புருஷர்கள் இவ்விரு பாலார்க்கும் பொதுவாக ஏற்படவேண்டுவது அவசியமே. இம்முறையில் தற்காலத்தில் கோ-மேஸன்ரீ என்ற ஞானியர் குழாம் ஒன்றுள்ளது. தியசாபிகல் சொசைட்டி என்ற பிரஹ்ம ஞானஸபை உள்ளது. உதயதிசை நக்ஷத்திரசங்கம் என்ற இன்னொன்று உள்ளது. இரு பாலாரும் இவைகளில் அங்கினராகலாம். இம்மூன்று மஹா சங்கங்களும் உலக முழுமையும் பரவியுள்ளன. பூர்வ ஜன்மங்களில் ரிஷிகளாயிருந்தவர்களே கோபிகைகளாகப் பிறந்தார்கள் என்ற ஐதிஹமும்



நமக்குத்தெரியும். அவர்களுடைய ஆத்ம சரிபாகத்தையாவது, ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் பரிசுத்தத்தையாவது சந்தேகிக்க இடமில்லை. ஸ்திரீ பிருஷர்களுக்குள் முற்காலத்திலிருந்த ஸௌஜன்யபாவம் தற்காலத்தில் ஏன் இல்லை? வீண் லஜ்ஜை யொருபக்கமும், டம்பமும் அஹங்காரமும் மற்றொருபக்கமும் நிறைந்துள்ளன. இரு பாலார்க்குள்ளும் நேர்மையான பழக்கம் இல்லாமையால், ஒருவரை யொருவர் நன்கறிந்து கொள்ளமாட்டார்கள். யோக்யதைக்குக் குறைவான பழக்கங்கள் தலைப்படுகின்றன. வெளித்தோற்றத்தால் மயங்காது உள்முகப்பட்டு பார்ப்போர் ஒவ்வொரு அணுவிலும்

## 23. தத்விஹீநம் ஜாராணாமிவ ॥

மாஹாத்மிய ஞானம் அதின்றேல் ஜாரர்களின் அன்பேயாம்.

குறிப்பு:—விட புருஷர்கள் ஸ்திரீகளிடத்தில் எத்தகைய அன்பு பூண்டு ஒழுகிறார்கள். ஸ்திரீ ஆகிருதியோடு உள்ள மாம்ஸ பிண்டமான சரீரத்தில் ஆசைகொள்கிறார்கள். ஒரு ஸ்திரீ மஹா துரோகியாயிருப்பினும், துராத்மாவாயிருந்தாலும் வெளி ரூபத்தின் மயக்கிற்கு ஈடுபடுகிறார்கள். ஆத்மாவின் மஹிமையையறிந்து அவர்கள் சிநேகிப்பாரானால், நற்குணமுள்ள ஸ்திரீ எவ்வளவு குரூபியானாலும், அவள் பொருட்டுத் தம் உயிரையும் கொடுப்பார்கள்.

## 24. நாஸ்த்யேவ தஸ்மிம்ஸ்தத்ஸுக ஸுகித்வம் ॥

(ஜாரர்களுடைய அன்பு) ஸ்திரீகளுடைய க்ஷேமத்தை லவலேசமும் கருதாதது.

குறிப்பு:—வேசிகள், விட புருஷர்களின் காம விகாரம் தடித்தனத்தாலேற்படுவதேயன்றி, பிறருடைய நலத்தைக் கருதுவதன்று.

25. ஸா து கர்மஜ்ஞானயோகேப்யோ(அ)ப்யதிகதரா ॥

ஆனல், பக்திமார்க்கம், கர்ம ஞானயோகங்களைவிட சிரேஷ்டமானது.

குறிப்பு:—ஏனென்பதைப் பின் சூத்திரத்தால் விளக்குகிறார்.

26. பலரூபத்வாத் ॥

(பக்திமார்க்கம் பரமபதமாகிய) பலனின் ரூபமாகவேயுள்ளதாலும்,

27. ஈச்வரஸ்யாப்யபிமானத்வேஷித்வாத் தைன்யப்ரியத்வாச்ச ॥

ஈசுவரனும் தாழ்மையுள்ளவர்களிடத்தில் பிரியமாயும் நானென்னும் அஹம்பாவமுள்ளவர்களை துவேஷிப்பதாலும்

குறிப்பு:—26. 27–ஆம் சூத்திரங்களில் கூறப்பட்ட காரணங்களால் பக்தி மார்க்கம் மேல் என்று சொன்னர். இதர ஜனங்களிடத்தில் அவ்யாஜமான அன்பு இல்லாதானுக்கு அஹம்பாவம் ஒழியமாட்டாது, அஹம்பாவம் ஒழியாதவன் ஈசனைப் பிரீதிசெய்ய முடியாது, பக்தியை அப்பியசிக்காமல் அஹம்பாவம் ஒழியாது. ஸம்ஸார துக்கத்திலிருந்து விடுபட்டு மோக்ஷம் என்னும் நிரதிசயானந்தத்தையே ஜீவகோடிகளெல்லாம் முடிவில் அடைகின்றன. பக்திமார்க்கம் அவ்வானந்த ரூபமாகவே உள்ளது. இவ்விரு காரணங்களாலும், மற்ற இரு மார்க்கங்களைக்காட்டிலும் அது உயர்வானது, குசேலர் முதலிய பக்தர்களை பகவான் ரக்ஷித்தும் கம்ஸன் முதலிய அசுரர்களை ஸம்ஹரித்துமிருப்பது இச்சூத்திரத்துக்குதாரணங்கள்.

28. தஸ்யா ஜ்ஞானமேவ ஸாதனமித்யேகே ॥



அதற்கு ஞானம்தான் சாதனம் என்று ஒரு சாரார் சொல்லுகிறார்கள்.

29. அன்யோன்யாச்ரயத்வமித்யன்யே ॥

பக்தியும் ஞானமும் ஒன்றிற்கொன்று சாதனம் என்று மற்றொரு சாரார் சொல்லுகிறார்கள்.

30. ஸ்வயம் பலரூபதேதி ப்ரஹ்மகுமாரா꞉ ॥

(அதனல்) நாரதருடைய அபிப்பிராயம் என்னவெனில்: "இது நேராகவே மோக்ஷ ரூபமான மார்க்கம்'' என்பதாம்.

குறிப்பு:—ஸூர்யப் பிரகாசத்தை நேரில் பார்க்கிறோம். அதன் பிரகாசமும், அதன் உஷ்ணமும் அமிதமாயிருக்கின்றன. ஒரு சிறு கிளிஞ்சற் சிப்பியிலும் அதன் பிம்பத்தைக் காண்கிறோம். சிறு பிம்பமும் நிஜ ரூபத்தைப்போலவே அவ்வளவு தெளிவான பூர்ண ரூபத்தோடு அதற்குத்தக்க உஷ்ணம் வெளிச்சத்தோடு விளங்குகிறது. அம்மாதிரியே மோக்ஷமென்பது இம்மார்க்கத்தின் முதற்படியிலேயே ஆரம்பிக்கிறது. பக்திக்கு பக்தியே பலன். வேறொரு பலன் பக்தனுக்கு அனாவசியம். அநுபவத்தைக்கொடுப்பது பக்தியேயின்றி ஞானமல்ல வென்பதை பின் சூத்திரத்தால் விளக்குகிறார்.

31. ராஜக்ருஹ போஜனாதிஷு ததைவ த்ருஷ்டத்வாத் ।

அரண்மனையையும் ஆகாரத்தையும் தத்ரூபமாகப் பார்த்ததனல்,

32. ந தேன ராஜபரிதோஷ꞉ க்ஷுச்சாந்திர்வா ।

அப்படிப் பார்ப்பதனல் ராஜாவுக்குத் திருப்தி ஏற்படாது பசியும் தணியாது.

குறிப்பு:—ஞானமார்க்கம் எவ்வளவு பயன்பட்டாலும், அநுபவத்தைக் கொடுக்கக்கூடியது பக்திமார்க்கம் என்று சித்தாந்தப்படுத்துவதற்காக மேலிரண்டு சூத்திரங்களையும் எழுதியுள்ளார். சோறு நன்றாயிருக்கிறதென்று கண்ணால் மட்டும் பார்த்துவிட்டுச் சும்மாயிருந்தால் பசி தீராது. கையினாலெடுத்துச் சாப்பிட்டால்தான் பசி தீரும் என்று ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியவர்கள் "ஸத்குரு பாதங்களில்" என்னும் நூலில் கூறியுள்ளார், பக்தி மார்க்கம் ஒன்று தான் ஆத்மாவின் பசியைத் தீர்க்கும். அரண்மனையைப் பார்த்து, அது நன்றாயிருக்கிறது என்று மட்டும் அறிந்தால், அதிற் குடியிருந்த பயனையடைந்ததாகுமா?

33. தஸ்மாத்ஸைவ க்ராஹ்யா
முமுக்ஷுபி: ॥

ஆகையால் அதுவே முமுக்ஷுக்களால் கைக்கோள்ளத் தக்கது.

34. தஸ்யா: ஸாதநாநி
காயந்த்யாசார்யா: ॥

அதன் சாதனங்களை ஆசார்யர்கள் அல்லது குருக்கள் கானம் செய்கிறார்கள்.

35. தத்து விஷயத்யாகாத்
ஸங்கத்யாகாச்ச ॥

விஷயங்களை யொழிப்பதனாலும் பற்றறுத்தலினாலும்.

குறிப்பு:—நம் பஞ்சேந்திரியங்களைத் திருப்திசெய்யப் புகுவதெல்லாம் விஷயங்கள். பசியை உத்தேசிப்பதை விட்டு, நாக்கை உத்தேசித்து தீனிகள், வெற்றிலை புகையிலைகளை மெல்லுகிறோம். மூக்கை உத்தேசித்து அநேக வாஸனைகளை யணிகிறோம். பொடிபோடுகிறோம். காதைத் திருப்திசெய்ய வம்புப் பேச்சுகளைக் கேட்கிறோம், கண்களைப் பிரியப்படுத்த ஜல்லிக் கட்டுகள், வேட்டை நாய்களை விரட்டி வேடிக்கைப்பார்ப்பது, இன்னும் அநேக விகாரச்செயல்களைக் கண்ணால் பார்க்கிறோம். அப்படியே கை, கால்களையும், மற்ற இந்திரியங்களையும் தவறான வழிகளில் செல்ல விடுகிறோம். அல்ப சுகத்தைக் கருதி இப்படிச் செய்கிறோம், ஒரு தரம் அநுபவித்த விஷய சுகங்களின் வாஸனைகள் நம் மனத்திற் பதிந்து, அவ்விஷய சுகங்களின் மீது ஓர் பற்றை நமது சுபாவத்தில் உண்டாக்குகின்றன. இப்பற்றைத்தான் காமனை என்கிறோம். இந்திரியங்களை வெளிநோக்காகச் செல்லவிட்டு அற்ப சுகத்தை யநுபவித்து ஏற்படுகின்ற வாஸனை கீழ்த்தரமானது. ஆனால் இந்திரியங்களை வெளிநோக்காமல் தடுத்து உண்முகப்படுத்தினால் மோக்ஷ சுகங்களை யநுபவிக்கலாம். அவ்வநுபவ ரூபமான வாஸனைதான் பக்தி. இதற்குத்தான் தியானம் விதிக்கப்பட்டிருக்கிறது. தியானமென்பது என்ன? தசவிதமான கர்மேந்திரிய ஞானேந்திரியங்களையடக்கி மனத்திற்கும் சிந்தனைக்குரிய ஓர் பரமார்த்த விஷயத்தைக் கொடுக்கிறோம். அது யானைத்தும்பிக்கைக்குச் சங்கிலிகொடுத்த மாதிரியாகிறது. மனம் எவ்வளவு அசைந்தபோதிலும், எத்தனைவித விர்த்திகள் உண்டானபோதிலும், நாம் கொடுக்கும் பரமார்த்த விஷயம் மனத்தை நிறுத்த ஓர் நங்கூரம்போல் வேலைசெய்கிறது. மனோவிர்த்திகளாகும் அலைகளை நிறுத்த நாம் மிகவும் போராட வேண்டியிருக்கிறது.



36. அவ்யாவ்ருத்தபஜநாத் ॥

இடைவிடாத பக்தியால்.

குறிப்பு:—முன் சூத்திரக்குறிப்பில் சொல்லப்பட்டபடி, பக்தி என்ற விஷயத்தைத் தியானத்திற்கு எடுத்துக்கொண்டதாக வைத்துக்கொள்வோம். வேறு விர்த்திகளை ஒழித்து, பக்தியென்பது எக்காலத்தும் எவ்விடத்தும் எல்லோரிடத்தும் கொள்ளவேண்டிய அன்பு என்று தாரணைசெய்கிறோம். அவ்வெண்ணத்தையே மனத்தில் நிலைநிறுத்துகிறோம். ஆனால் அநேகர் செய்யும் தவறு ஒன்று உள்ளது. தியானத்தை

இடைவிடாமல் செய்வதில்லை. அதாவது தியானகாலத்தில் மட்டும் தான் அவ்விஷயம் நம் மநத்தில் உள்ளது. ஆஸனத்தைச் சுருட்டி மடக்கி எழுந்து புறப்படும்போதே வேறு விஷயம் மநத்திற் புகுகின்றது. இன்னும் வெவ்வேறு காரியங்கள் வரும்போதெல்லாம் வெவ்வேறு எண்ணங்கள் நம் மநத்தில் புகுகின்றன. தியானித்த விஷயம் அடியோடே தொலைந்துபோகிறது, தியானத்தால் நாம் சேகரித்துக் கொள்ளும் வீரிய சக்தியை ஒழுகவிட்டு, உலகத்தில் நாம் எண்ணிறந்த துறைகளில் பிரவிர்த்திக்கிறோம். உலகப் பிரவிர்த்திகளால் நமது பக்திக்கு பங்கம் நேருகிறது. அதற்குபாயம் சொல்லுகிறார்.

37. லோகேபி பகவத்குணச்ரவணகீர்த்தநாத் ॥

உலகத்திலும் பகவானுடைய குணங்களைக் கேட்டும் பகவானுடைய குணங்களை சொல்லியும் வருவதனால்

குறிப்பு:—உலகப் பிரவிர்த்திகளும் ஈசுவரனுடைய காரியங்கள் என்றே பாவித்துச் செய்துவருவோமானால் அவருடையகுணங்களைச்சொல்லாமலும் கேட்காமலும் இருக்கமுடியாது. அப்போதுதான் பக்தியானது தொடர்ந்து அறுமல் நிகழும்.

38. முக்யதஸ்து மஹத்க்ருபயைவ பகவத்க்ருபாலேசாத்வா ॥

முக்கியமாக, மஹான்களுடைய கிருபையால்தான் (முடியும்) அல்லது பகவானுடைய கிருபை ஒரு லேசமாவது இருந்தால்தான் முடியும்.

குறிப்பு:—மஹான்கள் தமது சிந்தனு சக்தியால் தமது சிஷ்யர்களுடைய மநங்களிலும் நல்லெண்ணங்களைத் தோன்றச்செய்கிறார்கள். சாமானிய மனிதர்களுக்கு மஹரிஷிகள் தாம் ஆத்மசக்தியைப் புகட்டுகிறார்கள். ஈசுவரனுடைய கிருபை நமக்குக் கிடைப்பதற்கு மஹான்கள் தாம் வாக்கால்

210825
600 008

விலை நயம்! நல்ல மல்!!

# கலர் சேலைகள்!

நல்ல துவாலிடி! சாயம் காரண்டி!!

ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் தினப்படி உபயோகிக்க ஒவ்வொரு குடும்பத்துக்கும் மிகவும் உபயோகமானது.

எங்களிடம் பச்சை, கெம்பு, பொடி, நீலம், கருப்பு, ஊதா. ஆரஞ்சு, ரோஸ், காகி, ஆலிவ்கிரீன், சிமிட்டு கலர்கள் தயாராகிறது, மேல்கண்டவை ரொம்ப கப்பாகவும் கூட அவரவர்கள் விருப்பப்படி தயார் செய்து கொடுக்கலாம். ஒரு உருப்படிக்கு ½ கெஜம் முதல் 11 கெஜம் வரையில் கிடைக்கும்.

பாவாடை, சித்தாடை, தாவணி, ரவிக்கை கெஜம், 2, 2¼, 2½, 2¾, அகலங்களில் எவ்வளவு நீளத்திலும் கிடைக்கும். மேல் கண்டவைகள் சாயம் போனால் வாங்கின தேதிமுதல் இரண்டு மாதத்துக்குள் அனுப்பிவிட்டால் மறு சாயம் இனாமாய்ப் போட்டு பார்சல் சிலவும் அனுப்பிவிடுகிறோம்.

நாங்கள் இதர சேலைகளும் பட்டுகளும் நூல்களும் வியாபாரிகளுக்கும் சில்லரைக்கும் நயமாய் காரண்டி சாயம் போட்டுக் கொடுக்கிறோம்.

கமிஷன் ஏஜண்டுகள் தேவை. நல்ல கமிஷன் கிடைக்கும். ஒரு அணா ஸ்டாம்பு வைத்து அனுப்பினால் காட்லாக்கும் சாம்பிளும் இனாமாய் அனுப்பப்படும்.

40″ 8 கெஜம் சித்தாடை 1க்கு 4-8-0 Net 4-8-0.
44″ 9 கெஜம் சேலை 1க்கு 6-0-0 Net 6-0-0.
50″ 9½ கெஜம் சேலை 1க்கு 7-8-0 Net 7-8-0.
அசல் 703 மல்லில் போட்டது 9½ கெஜம் சேலை 1க்கு 10-8-0.
44″ ஜப்பான் மல்லில் போட்டது 9 கெஜம் Net 5-0-0.

**N. B** ஒவ்வொரு ஆர்டரும் (நீளம் முழம்) (அகலம் இஞ்சு) கலர் ½ கப்பு, ¾ கப்பு, முழு கப்பு, விபரமான அட்ரஸ் ரயில் அல்லது போஸ்டு பார்சல் தெளிவாய் எழுதி 4ல் 1 ஒருபாகம் அட்வான்ஸ் அனுப்பவேண்டியது.

V. P. சார்ஜ் பிரத்தியேகம்.

O. V. கோபாலஸ்வாமி அய்யர்,
ஸ்ரீ வேணுகோபால் டையிங் வொர்க்ஸ்.
299. தம்பு செட்டி தெரு.
ஜி. டி., மதராஸ்,

# "தியஸாபிகல் ஸொஸைட்டி"

என்னும்

# பிரம்மஞான ஸபை.

---

இஃது 1875-௵ நவம்பர்-௴ 17௳ அமெரிக்காவிலுள்ள நியூயார்க் நகரில் ஏற்பட்டு, சென்னை அடையாற்றில் இப்போது நிலை பெற்றிருக்கிறது. ஸமரஸ புத்தியோடு தத்துவ ஆராய்ச்சிக்கு ஒன்று சேருகிறவர்களின் சங்கம் இது. ஆதலால் இச்சங்கத்தார் நாஸ்திகத்தைக் கண்டித்து, ஆஸ்திக புத்தியை வளர்த்து, மனித வர்க்கத்திற்கு ஞானவழியில் உபகரிப்பவராவர். இதன் முக்கிய கொள்கைகள் மூன்று:—

(1) ஜாதி, மதம், வர்ணம், வகுப்பு, ஆண், பெண் இப் பேதங்களின்றி, ஸர்வஜன ஸஹோதர பாவம் நிலைபெறச் சாதகமாயிருத்தல்.

(2) வெவ்வேறான மதம், தத்துவ சாஸ்திரம், பௌதிக சாஸ்திரங்களை ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்வதை ஆதரித்தல்.

(3) மனிதனிடத் தடங்கியுள்ள சக்திகளையும் நமக்கு விவரந் தெரியவாராத பிரபஞ்ச நியதிகளையும் பரிசீலனஞ் செய்வது.

இச்சபையில் சேருகிறவர்கள் எம்மதத்தினராகவும் அல்லது ஒரு மதத்தையும் சேராதவராகவும் இருக்கலாம். ஆனால் மேற் கண்ட நோக்கங்களை ஒப்புக்கொள்ள வேண்டும். மதத் துவேஷங்களை ஒழித்து நல்லெண்ணமுள்ளவர்களாயிருந்து கொண்டு தங்கள் மத அபிப்பிராயங்கள் எப்படியிருப்பினும் மதவுண்மைகளைப் படித்து மற்றவர்களோடு தங்கள் படிப்பைக் கலந்து கொள்ள விரும்பும் படிப்பாளிகள் இச்சங்கத்தில் ஒருங்கு சேருகிறார்கள். அவர்கள் ஒற்றுமைக்கு ஓர் பொது நம்பிக்கை காரணமன்று. தத்துவத்தைக் கண்டறியும் ஓர் லக்ஷியத்தோடு அவர்கள் ஒருங்கே முயற்சிப்பதுதான் காரணம்.

ஓம் தத் ஸத்.